**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No.160/2015**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 3 ம் தேதி வெள்ளி கிழமை குற்றம் முறையிடுபவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தமயந்தி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜா | தொழில் | : உதவி ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : நாகப்பன் | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : |

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2014-ஆம் வருடத்தில் அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது இந்நீதிமன்றத்தின் பிரிவு 156(3)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் அ.சா.1 ரோகினியின் மனுவினை 05.08.2014-ஆம் தேதி 14.00 மணிக்கு அவலூர்பேட்டை காவல் நிலையக்குற்ற எண்.267/2014 இதச பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(2).ன் பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

2. பின்னர் வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் 05.08.2014 ம் தேதி 15.00 மணி அளவில் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மணி, வேலு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

3. பின்னர் இவ்வழக்கின் காயம்பட்ட நபர்களான வெங்கடேசன், ரோகினி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயச்சான்றுகள் பெற்றேன். அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் ஆகும்.

4. பின்னர் எனது விசாரணையை முடித்து இவ்வழக்கின் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(2).ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**(6. 05.08.2014 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6**

**7. 05.08.2014 தேதியிட்ட மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது).**

**குறுக்குவிசாரணை:**

**5.** நீதிமன்றத்திலிருந்து கிடைத்த மனுவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர் சிறப்பு உதவி ஆய்வளார் ரகமதுல்லா என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை சிறப்பு உதவி ஆய்வாளரை பட்டியல் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 மனுவில் குறிப்பிடப்பட்ட 13.06.2013 தேதியன்று அ.சா.1 ரோகினியால் எங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 28.06.2013 தேதியன்று பதிவு தபால் மூலமாக புகார் அனுப்பியதாக அ.சா.ஆ.1 மனுவில் குறிப்பிட்டுள்ள நிலையில் அவ்வாறு இம்மனு பதிவு தபாலில் வந்ததா என்றால் இல்லை. CC.No.96/2016-ல் என்ற வழக்கில் உள்ள பார்வை மகசர் சாட்சிகளே இவ்வழக்கிலும் பார்வை மகசர் சாட்சிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவம் அதிகாலை 05.00 மணியளவில் நடந்ததாக அ.சா.ஆ.1 புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி வேலு என்பவரை நான் விசாரணை செய்த போது அ.சா.1 -னின் மகள் ரேணுகாவை எதிரிகள் தடியால் அடித்தாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். மேற்படி ரேணுகா சாட்சியாக இல்லை என்றால் சரிதான். ரேணுகா மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து மனு வந்ததன் பேரில் வழக்கு பதிந்து கொண்டு சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக பதிவு செய்து அதற்கு ஆதராக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து வந்த ஆவணத்தை முறையாக பரிசீலனை செய்திருந்ததால் உண்மை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.